சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.01.07.2026

OS.No. 20/2022

DW1 : முருகானந்தம் (வயது 48 ) த/பெ. தங்கையன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>**வாதி தரப்பு கு.வி தொடர்ச்சி**</u>

எனது நிரூபண வாக்குமூலம் பாரா 6 ல் கூறியுள்ளவாறு சர்வே எண். 215 மற்றம் 216 அமைந்துள்ள விதத்தை வரைபடம் மூலம் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றும் ஆனால் அதற்கான வருவாய் புல வரைபடத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் நானாக வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் உண்மையான விபரங்கள் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

நிரூபண வாக்குமூலம் பாரா 6 ல் வாய்மொழி ஏற்பாடு செய்ததாகசொல்லியுள்ளேன் என்றும் எந்த தேதியில் அந்த வாய்மொழி ஏற்பாடுசெய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் தேதி தெரியாது.

அந்த வாய்மொழி ஏற்பாட்டில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் அருணாச்சல உடையாரும் முத்துசாமி உடையாரும் அண்ணன் தம்பிகள், அருணாச்சலத்தின் ஒரே மகன் குளுந்தான், அவரது வாரிசுகள் மணிவேல், அவரது மனைவி மீனாம்பாள், அருணாச்சலத்தின் வாரிசுகளுக்கு புல எண். 216 ல் கீழ்புறம் ஏக்கர் 1.12 செண்ட்டும் புல எண். 215 ல் ஏக்கர் 5.00 ல் கீழ்புறம் ஏக்கர் 3.56 செண்ட் மட்டும் அருணாச்சல வாரிசுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது, முத்துசாமி உடையாருக்கு அவரது ஒரே மகளான தைலம்மைக்கும் அவரது கணவர்

நாதப்புடையாருக்கும், அவர்களது ஒரே மகனான தங்கையனுக்கும் புல எண். 216 ல் மேல்புறம் ஏக்கர் 3.56 செண்ட்டும், புல எண். 215 ல் மேல்புறம் ஏக்கர் 1.44 செண்ட்டும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நான் சொல்வது போல் மேற்சொன்ன விதத்தில் வாய்மொழியாக பிரிக்கப்பட்டு, அனுபவம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். சட்டப்படி சொத்துகளின் அனுபவம் மாற்றம் செய்யப்பட்டால் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும்.

அதன்படி மேற்படி வாய்மொழி ஏற்பாடு குறித்து ஆவணம் எதுவும் பதிவு செய்துகொள்ளவில்லை என்றால் பதிவு செய்துள்ளோம். எந்த தேதியில் பதிவு செய்து கொண்டோம் என்றால் 05.01.1980 ல் பதிவு செய்தோம்.

நான் கூறுவது போல் 05.01.1980 ல் ஆவணம் எழுதி கொண்டுள்ளோம் என்ற பட்சத்தில் வாய்மொழி ஏற்பாடு செய்ததாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல.

ஆதியில் வாய்மொழியாக செய்து கொண்டதை பின்னிட்டு பதிவு செய்து கொண்டோம். அதற்காக தான் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம்.

நான் கூறுவது போல் வாய்மொழியாக ஏற்பாடு செய்து கொண்டதை பொறுத்து எந்த ஒரு பதிவு ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

நான் கூறிய 05.01.1980 ஆம் தேதியிட்ட பதிவு பத்திரத்தின் பேரில் தான் எனது தங்கை சுசிலாவிற்கு 19.01.2022 ஆம் தேதியிட்ட பாக விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் சரியல்ல.

எந்த சொத்தை தான் எழுதி கொடுத்தோம் என்றால் எங்களது மூதாதையருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து பாக விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தோம்.

எனது தந்தையின் பெயரில் உள்ள பட்டாவை பொறுத்து தான் பாக விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தோம். 19.01.2022 ஆம் தேதியிட்ட பாக விடுதலை

பத்திரத்தில் கண்ட சொத்திற்கான எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

19.01.2022 ஆம் தேதியிட்ட பாக விடுதலை பத்திரம் ஏற்பட்டதாக கூறும் சொத்தில் எனக்கோ எனது தகப்பனாருக்கோ எனது சகோதரருக்கோ, தங்கைக்கோ எந்த உரிமையும் அந்த தேதியில் இல்லை என்றும் அவ்வாறு உரிமை இல்லாத சொத்தை பொறுத்து பாக விடுதலை ஆவணம் எழுதி கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இந்த வழக்கு 2022 ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். எதன் அடிப்படையில் தாவா வழக்கு காலாவதியாகிவிட்டது என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு நான் கூறுவது போல் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்றும், உரிய காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

வாதியோ அவரது அம்மா மீனாம்பாளோ எனக்கு எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் 19.01.2022 ஆம் தேதியிட்ட பாக விடுதலை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வாதி தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்து தற்போது வரை வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தல்ல என்றால் சரியல்ல.

/signed/
முருகானந்தம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.07.01 20:04:48 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி.